## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) | நியமத்தின் 40(அ) பந்தியின் பிரகாரம் கணக்கீட்டுக் குறைபாடுகளை சீர்செய்வதற்காக நிறுவனத்தால் ஒப்பிடக்கூடிய தொகைகளை மீளக்குறிப்படுதல் அல்லது மீள வகைப்படுத்தும் போது 2 முன்னைய ஆண்டுகளிற்குரிய ஒப்பிடக்கூடிய தொகைகள் நிதி நிலைமைக் கூற்றில் வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கடந்த கால சீராக்கங்கள் தொடர்பாக அத்தகைய ஒப்பிடக்கூடிய தகவல்கள் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு ஆண்டு காட்டப்பட்டிருந்தது. நியமத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் 2 ஆண்டுகளிற்கான ஒப்பிடக்கூடிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ii) | நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் கணக்கீட்டு பிரிவால் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் ரூபா 1,033,424 தொகையான வெளிநாட்டு நாணய இலாபம் நிதிக் கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்ட நிதிக் கிரயம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் கணக்குகளில் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. |

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 8
-------------------------------------------------------

| | | |
|---|---|---|
| நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் முன்னைய காலப்பகுதி தவறுகளை திருத்தம் செய்யும் போது இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>• முன்னைய காலப்பகுதி தவறின் தன்மை<br>• நடைமுறைக்குச் சாத்தியமானளவு முன்னைய காலப்பகுதி ஒவ்வொன்றிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தத்தின் தொகை<br>• மிகவும் முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தத் தொகை | முன்னைய காலப்பகுதித் தவறுகளின் தன்மையுடன் இணங்கப்பட்டுள்ளது. நடைமுறைக்குச் சாத்தியமானளவு முன்னைய காலப்பகுதி ஒவ்வொன்றிற்காகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ள விடயங்களுடன் இணங்குவதற்காக திருத்தம் செய்யப்பட வேண்டிய தொகை மற்றும் திருத்தத் தொகை என்பன வழங்கப்பட்டுள்ளன. | முன்னைய காலப்பகுதிக்கான தவறுகளை திருத்தம் செய்த போது நிதிக்கூற்றுக்களில் உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16
-------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) நியமத்தின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் இறக்குமதி தீர்வைகள் மற்றும் மீளளிக்க முடியாத கொள்வனவு வரிகள் மற்றும் இருப்பிடத்திற்கு சொத்துக்களை கொண்டுவருவதற்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய ஏதாவது கிரயம் சொத்துக்களின் கிரயமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் துறைமுக மற்றும் விமான நிலைய கட்டணங்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகள், களஞ்சியப்படுத்தல் கட்டணங்கள், முகவர் தரகுகள், செயற்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் ஏற்றுதல் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட antennas தொடர்பாக ரூபா 222,894 மொத்த தொகை பராமரிப்புக் கிரயமாக | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட துறைமுக மற்றும் விமான நிலைய கட்டணங்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகள், களஞ்சியப்படுத்தல் கட்டணங்கள், முகவர் தரகுகள், செயற்பாட்டுக் கட்டணங்கள் என்பவற்றை சேர்ப்பதன் மூலம் சொத்துக்களின் கிரயம் கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்தது. ஆகையால் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ii) | நியமத்தின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம் பொறியை கொள்வனவு செய்வது தொடர்பாக செலவிடப்பட வேண்டிய நிர்வாக மற்றும் ஏனைய பொது மேந்தலைக் கிரயங்கள் மூலதனமாக்கப்படக் கூடாத போதிலும் 8 Transmeters கொள்வனவின் போது வெளிநாட்டுப் பயிற்சி தொடர்பாக ஏற்பட்ட ரூபா 1,948,500 தொகை சொத்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | Transmeters செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப பயிற்சியொன்றாக இது காணப்படுவதனால் இயந்திரங்களை நிறுவி செயற்படுத்துவதற்காக இச் செலவினம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் ஆதனம் பொறியை கொள்வனவு செய்வது தொடர்பாக செலவிடப்பட வேண்டிய நிர்வாக மற்றும் ஏனைய பொது மேந்தலைக் கிரயங்கள் மூலதனமாக்கப்படக் கூடாது. ஆகையால் வெளிநாட்டுப் பயிற்சி தொடர்பாக ஏற்பட்ட கிரயம் மூலதனமாக்கப்படக் கூடாது. |
| (iii) | நியமத்தின் 73(ஊ) பந்தியின் பிரகாரம் ஆண்டின் ஆரம்ப மீதிக்கு கொள்வனவு, மீள்மதிப்பீடு, வருடாந்த பெறுமானத்தேய்வு, விற்பனைகள் மற்றும் அகற்றல்களை சீராக்கம் செய்த பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒவ்வொரு வகுப்பினதும் முன்கொண்டுசெல்லும் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தலைமை அலுவலகத்தின் மென்பொருள் விடயங்களின் மீதி தேறிய பெறுமதிக்கு மேற்கொள்ளப்பட்ட பின்னர் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நியமத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (iv) | நியமத்தின் 73(இ) பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒவ்வொரு வகுப்பிற்கும் பெறுமானத் தேய்வு வீதம் | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | மென்பொருளிற்கான பெறுமானத்தேய்வு வீதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மென்பொருளிற்கான பெறுமானத் தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகமும் முற்றும் பிராந்திய சேவை அலுவலகங்களின் நேர வருகை முறைமையை (time attendance system) வழங்கி நிறுவுவதற்காக ஒப்பந்தத்தை மீறிய ஒப்பந்ததாரர் தொடர்பாக செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதன் மூலம் பெறப்பட்ட ரூபா 143,550 தொகை ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மென்பொருள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மென்பொருள் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.. | கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் களவாடப்பட்ட ரூபா 425,000 கிரயமான Power Logger இயந்திரத்தின் பெறுமதி பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து பெறப்படும் வரை பெறவேண்டிய நட்டமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படுவதற்குப் பதிலாக பொருளிருப்பிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. | குறிப்புக்களில் தனியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வின் போது அகற்றுவதற்காக இனங்காணப்பட்ட ரூபா 1,430,845 பெறுமதியான சீடி கசட்கள் மற்றும் இதழ்களின் | குறிப்புக்களில் தனியாக காட்டப்படுவதற்கும் பொருள் மெய்மையாய்வு ஊடாக அகற்றப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (magazines) இருப்பு அகற்றப்படும் வரை பயன்படுத்த முடியாத இருப்பாக காட்டப்படுவதற்குப் பதிலாக இருப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 830,250 தொகையான மென்பொருள் பெறுமானத்தேய்வுப் பெறுமதி மென்பொருள் பெறுமானத்தேய்வக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அரசாங்க மானிய காலக்கழிவுக் கணக்கிற்கு தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான அக் கணக்கின் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் திருத்தம் செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | காணாமல் போன power log இந்திரத்தின் நட்டத்தை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவரிற்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த பணிக்கொடை கொடுப்பனவில் ரூபா 455,000 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனினும் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் இத் தொகை செயற்பாட்டு வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஆணஷ்டிற்கான நட்டம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது பெறவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | 2 வெளிநாட்டு ஒலிபரப்பு அலைவரிசைகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 7,001,084 தொகை கணக்காண்டிற்குரிய ஐயக் கடன் கணிப்பீட்டின் போது கருத்தில் | 2 வெளிநாட்டு ஒலிபரப்பு அலைவரிசைகளிற்காக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஐயக் கடன் கணிப்பீட்டின் போது அனைத்து பொருத்தமான கடன்பட்டோர்களும் கருத்தில் கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கணக்குகளில் ஆண்டிற்கான ஐயக் கடன்கள் ரூபா 125,022 ஆல் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | | வேண்டும். |
| (எ) | ஊவா மாகாண சமுதாய வானொலி நடவடிக்கைகளிற்காக 2.5 கிலோவாற்ஸ் transmeter ஒன்றை கொள்வனவு செய்து வழங்குவதற்காக 2008 ஆம் ஆண்டில் ஊவா மாகாண சபையால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகை மூலதன மானியமாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மானியக் கணக்கு அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2008 ஆம் ஆண்டில் மூலதன மானியமாக இத் தொகை கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் இது தற்போது ஊவா மாகாண சமுதாய வானொலியிடமிருந்து பெறவேண்டிய தொகைக்கு சீராக்கம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் குணஸ்கிரிய ஒலிபரப்பு நிலைய வளாகத்திற்காக செலுத்த வேண்டிய மொத்தக் குத்தகை வாடகை ரூபா 12,305,708 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 1,215,000 தொகையான 2018 ஆம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய குத்தகை வாடகை மாத்திரம் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய குத்தகை வாடகை கணக்கு மீதி ரூபா 11,090,708 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மொத்த செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஐ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தவணை தவறிய வரி அறவீட்டுப் | ரூபா 89,725,536 தொகையான வேறுபாடு சீர்செய்யப்படும். | மொத்த செலுத்த வேண்டிய வரித் தொகை |

| | | |
|---|---|---|
| பிரிவின் பதிவேடுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரி கணக்குகள் என்பவற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வரிப் பொறுப்பு ரூபா 211,984,585 (தண்டப்பணம் இன்றி) ஆக காணப்பட்ட போதிலும் இது நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத பொறுப்பின் கீழ் ரூபா 122,259,049 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 89,725,536 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஒ) ஒலிபரப்பு நிலையத்தை நடாத்துவதற்காக குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ளதும் 2009 ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டதுமான 119,5309 ஹெக்டெயர் பரப்பளவான காணிக்கான ரூபா 124,344,000 தொகையான செலுத்த வேண்டிய குத்தகை வாடகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக் குத்தகை வாடகையை பதிவளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய வரித் தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ஒலிபரப்புக் காலக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 11,057,598 ஆக காணப்பட்ட போதிலும் ஒலிபரப்புக் காலக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 12,419,431 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க, ஒலிபரப்புக் கால கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | இவ் விடயத்தை கண்டறிந்த பின்னர் பட்டியல்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காரணங்களை கண்டறிந்த பின்னர் அத்தகைய மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிக்கும் கடன்கொடுத்தோர் பட்டியல் மீதிக்குமிடையே ரூபா 1,361,833 இணக்கம் செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | ரூபா 9,032,782 தொகையான பட்டியல் மீதியுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய ரூபா 9,452,462 தொகையான பெற வேண்டிய வைப்பு மீதியை ஒப்பிடும் போது பட்டியல் மீதி ரூபா 419,680 இனங்காணப்படாத மீதியை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களின் மீதிக்குச் சமமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. கணக்கு மீதிகள் தேடப்பட்டு தனித்தனியான பெறவேண்டிய மீதிகள் இனங்காணப்பட்டிருந்தன. மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 419,680 ஆகும். | காரணங்களை கண்டறிந்த பின்னர் மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் ரூபா 238,823,973 தொகை ஒலிபரப்புக் காலக் கடன்பட்டோராக இனங்காணப்பட்டிருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் அம் மீதி ரூபா 239,218,614 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளின் மீதிகளிற்கிடையே ரூபா 394,641 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கடன்பட்டோர் பட்டியலிற்கு கடன்பட்டோர் மீதிக்கான பெறுமதிச் சேர்க்கை சீராக்கம் செய்யப்பட்டிருக்காதமை வேறுபாட்டிற்கான காரணமாக உள்ளது. 2019 ஆம் ஆண்டில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காரணங்களை கண்டறிந்த பின்னர் மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | **விடயம்** | **தொகை** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (அ) | Nations Trust Bank கணக்கின் மீதி | 3,570,403 | மீதி உறுதிப்படுத்தல் | ஈமெயில் ஊடாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | காணிகள் | 7,761,326 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் பௌதீக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மெய்மையாய்வு அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | கட்டிடங்கள் | 193,700,207 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் பௌதீக ரீதியான மெய்மையாய்வு மெற்கொள்ளப்பட்ட பின்னர் அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (ஈ) | லகண்ட கிளை வர்த்தகக் கடன்பட்டோர் | 12,807,802 | பெறுமதிக்கான கோவைகளின் விபரங்கள் மற்றும் விபரமான பட்டியல் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | தேவையான ஆவணங்களை பேணுவது கூட்டுத்தாபனத்தின பொறுப்பாக உள்ளதுடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் காணப்படாதிருந்தால் அத்தகைய மீதிகளிற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 01 ஆண்டு தொடக்கம் 18 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்ட ரூபா 14,958,606 தொகையான ஏனைய பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. (சீஎஸ்என் இற்காக) வீஓஏ நிறுவனத்தால் அந் நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 1.6 மில்லியன் தொகைக்காக trans meter ஒன்று வழங்கப்பட்டிருந்தது. | பெறவேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதவியணியினர் சார்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 32 ஆண்டுகளிற்கு மேலான காலப்பகுதிக்கு முன்னர் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக 1986 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 267,459 தொகை தீர்ப்பனவு செய்யப்படமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களிடமிருந்து அறவிடப்படக் கூடிய மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 65,085,768 மொத்த வெளிநாட்டு வியாபார கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 60,654,436 மீதி 10 ஆண்டுகளாக காணப்பட்டதுடன் இம் மீதிகளை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு முன்மொழியப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு தவிர்த்திருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய பணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளருடன் 2013 மே 17 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஊவா மாகாண சமுதாய வானொலியின் உடன்படிக்கை காலப்பகுதி 2016 மே 16 இல் முடிவடைந்திருந்ததுடன் 2016 மே மாத இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய மொத்த நிலுவை தொகை ரூபா 17,368,230 ஆக இருந்தது. 2018 செப்தெம்பர் 17 இல் காசோலை மூலம் ஊவா மாகாண சபையால் ரூபா 2 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ரூபா 15,368,230 தொகையான நிலுவை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட வேண்டியிருந்தது. | இது தொடர்பாக ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்துடன் ரூபா 3 மில்லியன் தொகை 2019 ஆகஸ்ட் 23 இல் செலுத்தப்பட்டிருந்தது. 4 தவணைகளில் மீதியை செலுத்துவதற்கு வாய்மொழி மூலம் இணங்கப்பட்டிருந்தது.உடன்படிக்கை தொடர்பான வரைபு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை காலப்பகுதி காலாவதியாகியிருந்தால் புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு அல்லது ஏனைய ஏதாவது சாத்தியமான தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 85,938,354 மொத்தப் பெறுமதியில் 104 கடன்பட்டோர்களிற்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் ரூபா 924,500 பெறுமதியான 3 கடன்பட்டோர்களால் மாத்திரம் பதில்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதில் ஒரு கடன்பட்டோர் 2011 ஆம் ஆண்டில் அவரது கடனை முழுமையாக செலுத்தியுள்ளார் என அறிவித்திருந்ததுடன் இன்னொரு கடன்பட்டோர் கூட்டுத்தாபனத்தால் குறிப்பிடப்பட்ட தொகையுடன் அவர் இணங்கியிருக்கவில்லை என அறிவித்திருந்தார். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | உரிய கடன்பட்டோர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குக் செலுத்த வேண்டிய ரூபா 149,420,035 கூட்டுத்தொகையான மீதியில் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான 37 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாதிருக்கும் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | சனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால மீதிகளிற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டியதுடன் சீர்செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் தனியார் வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 451,292 தொகையான முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோரில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்ட முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| | கணக்காய்வு விடயம் | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11.1 ஆம் பந்தி | கிரிமினல் குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றத்தில் சட்ட வழக்கு காணப்பட்ட சந்தர்ப்பத்தில் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதிக்கு சம்பளமெதுவும் செலுத்தப்படக் கூடாத போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட அதே பிரிவை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தால் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு அரைச் சம்பத்தை செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அங்கீகாரத்தின் பின்னர் 2011 ஒக்தோபர் தொடக்கம் 2016 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கு சம்பளமெதுவும் செலுத்தப்படுவதற்கு உரித்தில்லாத உத்தியோகத்தரிற்கு அரைச் சம்பளக் கொடுப்பனவாக ரூபா 954,664 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் 371(5) | குறித்த நோக்கத்திற்கு உடனடியான திகதியில் வழங்கப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதி உரிய நோக்கம் பூர்த்தியடைந்ததும் 10 நாட்களினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 501,000 கட்டுநிதியின் தீர்ப்பனவு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 நாட்கள் தொடக்கம் 293 நாட்கள் வரை தாமதித்திருந்தது. அதில் ரூபா 6,000 தொகை 13 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நிமித்தக் கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

(இ) நிதிப்பிரமாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 110 | மீள்விநியோகத்திற்கு செலவிடப்பட வேண்டிய தொகைக்கான நட்டங்கள் அல்லது சேதங்கள் கணக்கு தொடர்பாக அறவிடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட தொகைக்குரிய தகவல்களை உள்ளடக்கி நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | குறைபாடுகள் எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடுகள் நாளதுவரை பேணப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ)(ii) மற்றும் (iii) | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 6 மாத செல்லுபடியாகும் காலம் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 424,251 பெறுமதியான 86 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 27,312 பெறுமதியான 7 காசோலைகள் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிரந்ததுடன் ரூபா 17,620 பெறுமதியான 3 காசோலைகள் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானது | காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பிரதான வங்கிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 385,180 மற்றும் ரூபா 35,505 பெறுமதியான முறையே நேரடி வரவு மாற்றங்கள் மற்றும் நேரடி செலவு மாற்றங்கள் 2019 ஏப்ரல் 30 வரையிலும் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிரக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடி வரவு மற்றும் நேரடி செலவுகள் தாமதமின்றி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 1.9 வரித் தேவைப்பாட்டுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 16(2)(ஆ) பிரிவு மற்றும் 4 ஆம் பட்டியல் | | |
| ரூபா 84,561,277 தொகையான audio frequency devices, ரூபா 27,296,918 பெறுமதியான கட்டிடங்கள், ரூபா 31,078,837 பெறுமதியான கணனிகள், ரூபா 2,871,461 பெறுமதியான தளபாடங்கள், ரூபா 1,458,381 பெறுமதியான இயந்திரங்கள், ரூபா 3,400,000 பெறுமதியான trans meters மற்றும் ரூபா 2,700,000 மென்பொருட்கள் போன்ற மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமானத்தேய்விடக்கூடிய சொத்துக்களிற்கான மூலதன படியை கணிப்பீடு செய்யும் போது அப் பிரிவின் பிரகாரம் கட்டிடங்களிற்காக 5 சதவீதமும் ஏனைய சொத்துக்களிற்காக 20 சதவீதமும் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மூலதன படி ரூபா 16,998,428 ஆல் அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு மூலதன படிகள் கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 10(1)(ஆ) பிரிவு மற்றும் 4 ஆம் பட்டியல் | | |
| வரி விதிக்கத்தக்க வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது தண்டப்பணம் கழிக்கப்படக் கூடாது. 2018 ஆம் ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது தேறிய இலாபத்திலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 521,279 தண்டப்பணம் தேறிய இலாபத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் வரி விதிக்கத்தக்க வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி விதிக்கத்தக்க வருமானம் கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1982 இன் 43 ஆம் இலக்க திருத்திய முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பந்தி | | |
| | மார்ச் 31, யூன் 30, செப்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 இல் காலாண்டு முடிவடைந்த பின்னர் 15 நாட்களினுள் ஆணையாளர் நாயகத்திற்கு முத்திரை வரியாக செலுத்தப்பட வேண்டிய தொகை அனுப்பப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் முத்திரை வரி 23 நாட்கள் தொடக்கம் 79 நாட்கள் வரையான தாமதத்துடன் முத்திரைத் தீர்வை அனுப்பப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முத்திரை வரி அனுப்பப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

----------------------

**2.1 நிதி விளைவுகள்**

----------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 39,479,594 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 66,004,203 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 105,483,797 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான ஒலிபரப்புக் கால வருமானம் ரூபா 32,570,403 தொகையால் அல்லது 5 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நிர்வாகச் செலவினங்கள் ரூபா 52,840,227 ஆல் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

**2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

------------------------------------------------------------------------------------------------------------------------

| வருமான மூலம் | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| ஒலிபரப்புக் கால விற்பனை வருமானம் | 658,781,373 | 691,351,776 | 663,142,415 | 642,941,057 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சதவீதமாக வருமான முரண் (%) | (4.7) | 4.3 | 2.3 | 0.7 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 329,501,974 | 325,491,937 | 292,596,221 | 312,151,321 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சதவீதமாக செயற்பாட்டு வருமான முரண் (%) | 1.2 | 11.2 | (6.3) | 1.2 |
| மொத்த வருமானம் | 988,283,347 | 1,016,843,713 | 955,738,636 | 960,092,378 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சதவீதமாக மொத்த வருமான முரண் (%) | (2.8) | 6.4 | (0.5) | 0.6 |

**செவினம்**

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டுச் செலவினங்கள் | 347,499,195 | 327,918,435 | 321,745,130 | 386,746,874 |
| சதவீதமாக செயற்பாட்டுச் செலவினங்களின் முரண் (%) | 6.0 | 1.9 | (16.8) | 5.2 |
| நிர்வாகச் செலவினம் | 386,726,869 | 333,886,642 | 317,162,912 | 313,682,908 |
| சதவீதமாக நிர்வாகச் செலவினங்களின் முரண் (%) | 15.8 | 5.3 | 1.1 | 4.5 |
| நிதிச் செலவினங்கள் | 1,939,271 | 5,952,777 | 5,555,448 | 6,213,541 |
| சதவீதமாக நிதிச் செலவினங்களின் முரண் (%) | (67.4) | 7.2 | (10.6) | 30.1 |

(அ) முன்னைய 04 ஆண்டுகளிற்கான நிதித் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனத்தின ஒலிபரப்புக் கால வருமானத்தில் அதிகரிப்பு காணப்பட்டதுடன் இது 2018 ஆம் ஆண்டில் 4.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் முரண் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் 1.6 சதவீத அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது இது 6.3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் 2.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. திருகோணமலை ஒலிபரப்பு நிலையத்தின் ஒலிபரப்புக் கால வருமானம் 32 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 43,399,619 ஆல் குறைவடைந்திருந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. அதற்கிணங்க மொத்த வருமானம் வேறுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய 4 ஆண்டுகளில் வேறுபட்டிருந்த செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 6 சதவீதம் மற்றும் 15.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காத குச்சவெளி மற்றும் குணஸ்கிரிய காணியின் வருடாந்த வரிச் செலவினங்கள் மீளாய்வாண்டிற்கான நிர்வாகக் கிரயத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. இது செலவின அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| **விகிதம்** | **2018** | **2017** |
|---|---|---|
| **திரவத்தன்மை** | | |
| நடைமுறை | 1.03 :1 | 1.51:1 |
| விரைவு விகிதம் | 0.92:1 | 1.23:1 |
| **இலாபத்தன்மை** | | |
| மொத்தலாபம் | 4.37% | 9.56% |
| தேறியலாபம் | -5.99% | 9.55% |

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதத்தில் வீழ்ச்சியொன்றை காண முடிந்ததுடன் அதற்கிணங்க குறுங்கால நிதி பலம் வீழ்ச்சியடைந்துள்ளமையை பிரதிபலிக்கின்றது. மேலும் 2 ஆண்டுகள் தொடக்கம் 43 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக

காணப்பட்ட ரூபா 51,770,700 உள்ளூர் கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 62,905,695 வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதி என்பன நடைமுறைச் சொத்தில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்தலாப விகிதம் 9.56 சதவீதத்திலிருந்து 4.37 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் ஒலிபரப்புக் கால வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ் வீழ்கச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறியலாப விகிதம் 9.55 சதவீதத்திலிருந்து -5.99 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கிணங்க தேறியலாப விகித வீழ்ச்சி 15.54 சதவீதமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு அது கழிக்கப்பட்ட மாதத்தின் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2007 மற்றும் 2008 ஆண்டுகளிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் பணவனுப்பல்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தாமதப்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 15,051,384 நட்டம் ஏற்பட்டிருந்ததால் 2007 ஏப்ரல் தொடக்கம் 2009 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பட்ட நட்டம் ஏதாவது காணப்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்துக் கூட்டுத்தாபன ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் கொத்மலே சமுதாய வானொலியின் 5 ஊழியர்கள் சார்பில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புக்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக இக் குற்றத்திற்காக | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிகள் செலுத்தப்பட வேண்டும். ஏற்பட்ட நட்டம் ஏதாவது காணப்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,783,507 தண்டப்பணத்தை செலுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. ஆகையால் அதே தொகையால் கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை முடிவுறுத்தப்பட்டு 30 நாட்களினுள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் 02 உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பான 8 மாத தாமதத்திற்காக தொழில் ஆணயைாளரால் மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 253,884 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டும். ஏற்பட்ட நட்டம் ஏதாவது காணப்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 17 ஆண்டு காலத்திற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 221,965 நிதி மோசடி மற்றும் 2007 இல் இடம்பெற்ற ரூபா 281,110 தொகையான ஏனைய அத்தகைய மோசடி என்பன மீள்நிரப்பப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை முன்கொண்டுவரப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பண மோசடியை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டில் றுகுணு சேவய இல் காணமல் போயிருந்த 12 இசைக் கருவிகளிற்குரிய ரூபா 305,900 மீள நிறுவுதல் பெறுமதியை கணக்காய்வுத் திகதியான 2019 யூலை 31 வரையிலும் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய நட்டம் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹபுதலே ஒலிபரப்பு நிலைய வளாகத்தில் அமைந்துள்ள தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு சொந்தமான ஆர் எவ் கேபிளின் பகுதியொன்று 2018 மார்ச் மாதத்தில் அனுமதியின்றி | சொத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்யமுடியாததன் காரணமாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | நட்டம் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகற்றப்பட்டிருந்தது. அக் கேபிளை பாதுகாத்தல் பொறுப்பு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்பட்டது. எனினும் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து இது தொடர்பாக அறவிடப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து விளக்கம் எதுவும் கோரப்பட்டிருக்காததுடன் முறையான புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர்களிமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு 2019 யூலை 31 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடம்மாற்றப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | சீடி நூலகமொன்றிற்கு பொருத்தமில்லாதிருக்கின்ற சுற்றாடலொன்றில் இறுவெட்டு மற்றும் ஒலிநாடா நூலகம் (disc tape library) ஸ்தாபிக்கப்பட்டிருந்ததன் காரணமாக விரிவடைந்து, சுருங்கி, உறைவடைந்து தூசினால் மூடப்பட்டிருந்ததனால் இறுவெட்டுக்கள் மற்றும் ஒலிநாடாக்களின் உள்ளடக்கங்களில் சேதங்கள் அவதானிக்கப்பட்டன. | நீண்டகாலமாக இந்த இடத்தில் இறுவெட்டு மற்றும் ஒலிநாடா நூலகம் நடாத்தப்பட்டிருந்ததுடன் முறையான இடமொன்று தேடப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | சேதங்களை தவிர்ப்பதற்காக பொருத்தமான இடத்தில் இறுவெட்டு மற்றும் ஒலிநாடா நூலகத்தை நடாத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | டிஜிற்றல் முறைமையில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பழைய சங்கீத நிகழ்ச்சித்திட்டங்களை மாற்றும் போது தரவுத்தளமொன்று (சேமிப்பகம் (Backup)) மீளப் பயன்படுத்தக்கூடியவாறு பேணப்பட்டிருக்கவில்லை. 2017 ஒக்தோபரில் இடம்பெற்ற server பழுதுகள் காரணமாக 2009 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்பட்ட அனைத்து தரவு சேமிப்பகங்களும் அழிவடைந்திருந்தன. கணக்காய்வு திகதியான 2019 சனவரி 08 இல் உள்ளவாறு அழிவடைந்த சேமிப்பகங்களை அதிகாரசபை மீளப்பெற்றிருக்கவில்லை. | முறையான கணனி தரவுக் கோப்பொன்றை தயாரிப்பதற்கு பொறியியல் பிரிவிற்கு பணிப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. | பழைய பாடல்களை மாற்றும் போது வெளியிடமொன்றில் தரவு சேமிப்பகமொன்றை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | குணஸ்கிரிய ஒலிபரப்பு நிலைய வளாகங்களிற்குரிய நிலுவைக் குத்தகை வாடகையை அறவீட செய்வதற்காக அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு காணியின் | நிலுவை தொடர்பாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டு | சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலுவைக் குத்தகை |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையாளராக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் 2014 நவம்பர் 07 இல் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதமொன்று வழங்கப்பட்டிருந்தது. முரண்பாடுகளை சமரசம் செய்வதற்காக இரண்டு நிறுவனங்களின் பங்குபற்றலுடன் 2016 செப்தெம்பர் 09 இல் கலந்துரையாடலை நடாத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அக் கலந்துரையாடலில் ஒருவரும் பங்குபற்றியிருக்கவில்லை. இதனால் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2016 யூலை 01 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 9,075,833 நிலுவை தொகையை செலுத்துவதன் மூலம் முரண்பாடுகளை சமரசம் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் நிலுவை குத்தகை வாடகையை தீர்ப்பனவு செய்வதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | தொகையை செலுத்துவதன் மூலம் இச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும். |
| (உ) | இல. 513, படி 1 அநுராதபுர மாவட்டத்தின் நுவரகம் பலத கிழக்கு பிரதேச செயலக பிரிவின் அநுராதபுர புதிய நகரத்தில் அமைந்துள்ள காணியில் 1981 ஆம் ஆண்டிலிருந்து றஜரட்ட சேவய நடாத்தப்படுகின்றது. அக் காணியின் சட்டரீதியான உரித்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்படாத போதிலும் இவ் விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | காணியின் உரிமைத்துவம் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2016 ஆம் ஆண்டில் காணாமல் போயிருந்த power logger இயந்திரம் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை 2 ஆண்டுகளின் பின்னர் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 188,000 தொகை | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானது. | நட்டங்கள் தொடர்பான புலனாய்வுகள் சாத்தியமானளவு விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டில் பரீட்சிப்பு அறிக்கையை பெற்ற சமயத்தில் குற்றவாளியாக கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு பேர் ஓய்வுபெற்றிருந்தனர். | | பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (எ) | கொத்மலே சமுதாய வானொலியில் சேவையாற்றிய 5 ஊழியர்களிற்கான ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தப்படாததற்கு எதிராக நாவலப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் தொழில் உதவி ஆணையாளரால் சட்ட வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் ரூபா 1,783,507 + மேலதிகக் கட்டணம் ஆன தொகையை செலுத்துமாறு பணிக்கப்பட்டிருந்தது. எனினும் அப் பணிப்புரைக்கு எதிராக கூட்டுத்தாபனம் மேன்முறையீடு செய்திருந்ததுடன் இது தொடர்பாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட சட்டக் கட்டணங்கள் ரூபா 272,000 ஆக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகின்றது. | எவராவது உத்தியோகத்தரின் அலட்சியம் தொடர்பாக மேலதிகக் கட்டணம் செலுத்தப்பட வேண்டி ஏற்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அத்தகைய நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | உரிய திகதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டமை தொடர்பாக விதிக்கப்பட்ட ரூபா 15,051,385 மிகைக் கட்டணம் செலுத்தப்படாதமைக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொழில் ஆணையாளரால் சட்ட வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அத் தொகையை மேலதிகக் கட்டணமாக செலுத்துமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 100,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தொகையை ரூபா 250,000 மாதாந்த தவணையாக செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>(2018.10.02 ஆம் திகதிய கடிதம்) மேலதிக நீதவான் மன்றம் | பொறுப்புக்களிலிருந்து விலகிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |
| (ஐ) | 3 ஊழியர்களிற்கு ரூபா 1,006,374 தொகையான ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களை செலுத்தாதமைக்கு எதிராக உதவி தொழில் ஆணையாளரால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் சட்ட வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரேமாதிரியான நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் அத்தகை நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தானத்தின் வேண்டுதல் மீது வழக்கு நடைபெற்றது. ஆண்டின் போது சட்டக் கட்டணங்களாக ரூபா 45,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | 2014 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் வாகனமொன்றால் பிரயாணம் செய்த போது இடம்பெற்ற விபத்தால் ஏற்பட்ட பௌதீக ரீதியான மற்றும் மனநிலை பாதிப்புக்களிற்கான இழப்பீடாக ரூபா 8 மில்லியன் மற்றும் சட்ட நலன் கோரி கூட்டுத்தாபனத்தின் உதவி தயாரிப்பாளரால் கூட்டுத்தாபனத்திற்கெதிராக மாவட்ட நீதிமன்றத்தில் சட்ட வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சட்டக் கட்டணங்களாக ரூபா 63,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வழக்கு நடைபெறுகின்றது. | கூட்டுத்தாபனத்தின் வாகனங்களிற்காக முழுமையான காப்புறுதிப் பூட்கை பெறப்பட வேண்டும். |
| (ஓ) | நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட நேரத்தில் கூட்டுத்தாபனத்தின் சில் உத்தியோகத்தர்களிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்காதமை மற்றும் நிரந்தர சேவையிலுள்ள சில உத்தியோகத்தர்களிற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருக்காதமைக்கு எதிராக 2007 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தின் தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒவ்வொரு முறைப்பாட்டிற்கும் ரூபா 300,000 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டில் நட்டக் கட்டணங்களாக ரூபா 347,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வழக்கு நடைபெறுகின்றது. | எதிர்காலத்தில் சட்ட வழக்குகளை தவிர்க்கக்கூடியவாறு நிறுவனத்தின் நடவடிக்கைகள் முகாமை செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | விளம்பரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 150,000 தொகையை அறவீடு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் People Trust Credit Investment Company இற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதிலும் பிரதிவாதி வழக்கு | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நீதிமன்றத்திற்கு பிரதிவாதியின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கு செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைபெற்ற போது குடியிருந்த இடத்தை அவர் கைவிட்டதன் காரணமாக 3 ஆண்டு காலத்திற்கு மேலாக வழக்கு நடைபெற்றிருக்கவில்லை. நீதிமன்றத்திற்கு பிரதிவாதியின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கை கூட்டுத்தாபனம் செயற்படுத்தியிருக்கவில்லை. | | |
| (க) | கூட்டுத்தாபனத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 471,715 தொகையை அறவீடு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் சிலோன் சீமெந்து கம்பனிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. rit order இனை வழங்குவதற்கு பிரதிவாதியின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நீதிமன்றத்தால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும் கம்பனி தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக நீதிமன்றத்தில் 3 ஆண்டு காலத்திற்கு மேலாக வழக்கு நடைபெறுகின்றது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நீதிமன்றத்திற்கு பிரதிவாதியின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (கா) | 2 சந்தர்ப்பங்களில் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக ரூபா 4,716,813 மற்றும் ரூபா 7,551,750 தொகையை அறவீடு செய்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாகாண உயர் நீதிமன்றத்தில் 2015 ஆம் ஆண்டின் போது 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. பிரதிவாதி குடியிருக்கும் இடத்தை அவர் கைவிட்டதன் காரணமாக அந் நான்கு வழக்குகளும் நடாத்தப்பட முடியாதிருந்ததுடன் 4 ஆண்டுகளிற்கு மேலாக கைவிடப்பட்டிருந்தன. பிரதிவாதியின் தற்போதைய வதிவிடம் தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கை கூட்டுத்தாபனம் செயற்படுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நீதிமன்றத்திற்கு தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் இடாப்பின் ஊடாக பிரதிவாதியின் தற்போதைய வதிவிடம் தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கு செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கைகள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | உரிய ஆண்டறிக்கைகள் சாத்தியமானளவு விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 150,000 இற்கு மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் உரித்துரிமை முறையாக மாற்றப்பட்டிரக்காத 2010 ஆம் ஆண்டில் மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட மோட்டார் வாகனம் மீளாய்வாண்டின் போது கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வுத் திகதியான 2019 யூன் 05 வரையிலும் எக்கல ஒலிபரப்பு நிலைய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. | மஹாவலி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பயிற்சிப் பிரிவு நடாத்தப்படுகின்ற மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைத் தளம் மாத்திரம் தற்போது பயன்படுத்தப்படுகின்றதுடன் முதலாவது மற்றும் இரண்டாவது தளங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | எதிர்காலத்தில் திருத்தத்தை மேற்கொண்ட பின்னர் பயன்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | உடனடியாக கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தாலட ரூபா 200 மில்லியனிற்கு மேற்பட்ட பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைக்காக தனியொரு பிரிவு | எதிர்காலத்தில் பதவியணி ஒன்றுசேர்ப்பின் பிரகாரம் பெறுகைக்கான தனியான பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | பெறுகை பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் பலமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்கமைக்கப்படாததன் காரணமாக பெறுகையின் திட்டமிடல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்புரைகளை தயாரித்தல், கேள்விகளை மதிப்பீடு செய்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகள் உள்ளக ரீதியாக பரீட்சிப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பெறுகை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான நிலையில் காணப்பட்டது. எனினும் பெறுகையில் ஏற்படக்கூடிய தவறுகளின் ஆபத்துக்களை இழிவுபடுத்துவதற்காக கொள்கைகள், பயன்படுத்தப்படும் முறைகள் மற்றும் அமைப்பு கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | ஸ்தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இடையூறுகளின்றி செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக காணிகளின் கொள்வனவுகள் பெறுகை நிறுவனத்தால் பூர்த்தி செய்யபபட்டிருந்தன எனவும் ஏனைய அனைத்து தேவைப்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன எனவும் கட்டிட நிர்மாணங்களின் போது உறுதிப்படுத்தப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கு யாழ் எவ்.எம் யாழ்ப்பாணத்திற்காக ஸ்ரூடியோ தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 42.5 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் காணி கொள்வனவு செய்யப்பட முடியாதிருந்தது. ஆகையால் அச் செயற்திட்டத்தை மிளாய்வாண்டின் போது ஆரம்பிக்க முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானது. | காணியை பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நிதியாண்டினுள் கூட்டுத்தாபனத்தால் மதிப்பீடுகளிற்கு உள்ளடக்கப்பட்ட பெறுகைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட முடியும் என கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் ஒன்றிற்கு மேற்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. ஆரம்பிக்கப்படுவதற்காக காணப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான கொடுப்பனவிற்காக இந் நிதிகள் காணப்படுகின்றன. | சிறந்த நிதி முகாமைத்துவம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் பெறுகைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்கள் வினைத்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு பொறுப்பான தரப்பினர்கள் தவறியிருந்தனர். மேலும் வெற்றியளிக்காத பெறுகை திட்டங்கள் மற்றும் பலவீனமான நிதி முகாமைத்துவம் காரணமாக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 100 மில்லியனிற்கு மேற்பட்ட தொகை ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறு பிழையாக கணக்குகளில் காணப்பட்டன. | | அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் குறைந்த பெறுமதியுடைய பெறுகைக்காக கடை முறை பிரயோகிக்கப்பட்டு உடனடியாக கொள்வனவு செய்யப்பட முடியும். எனினும் கூட்டுத்தாபனத்தின் கணனித் தேவைப்பாடு மற்றும் அதன் கிரயம் ஆண்டொன்றிற்கு மிகவும் அதிகமாக காணப்பட்ட போதிலும் கணனிகளின் தேவைப்பாடு சிறிய பாகங்களாக பிரிக்கப்பட்டு 10 சந்தர்ப்பங்களில் கடை முறை பின்பற்றப்பட்டு ரூபா 9.12 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் திறந்த கேள்வி கோரல் தவிர்க்கப்பட்டதால் கிரய நன்மைகள் பெறப்பட முடியாதிருந்ததுடன் உயர் விலை செலுத்தப்பட வேண்டியிருந்தது. | வேண்டுதல்கள் மற்றும் நிதிப் பெறுவனவுகளின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | கூட்டுத்தாபனத்திற்கு ஆகக்கூடியளவு நன்மைகளை பெறக்கூடியவாறு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஆகக்குறைந்தது 3 ஆண்டுகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை பிரதான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான பொழிப்பாக்கப்பட்ட பெறுகைத் திட்டம் மாத்திரம் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் எற்பாடுகளின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பந்தியின் (ஆ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகையினதும் ஆரம்பம் மற்றும் பூர்த்தி செய்தல் வரையான காலம் மற்றும் | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் எற்பாடுகளின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| படிமுறைகளை வரிசையாக விபரித்து பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (எ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைக் குழுவின் உத்தியோகத்தர்கள் இடையூறுகளின்றி செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக காணிகளின் கொள்வனவுகளை பெறுகை நிறுவனம் பூர்த்தி செய்திருந்தது எனவும் ஏனைய அனைத்து தேவைப்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன எனவும் கட்டிட நிர்மாணங்களின் போது உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அத்தகைய தெளிவுபடுத்தல் பெற்றுக்கொள்ளப்படாமல் அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்டிருக்காத காணியில் கந்துரட்ட சேவய .ற்காக இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,830,890 தொகை செலவிடப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அணிவத்த பகிரவகண்ட இறையில் காணி (free hold land) 500 மீற்றர் தூரத்தில் காணப்பட்ட போது இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இக் காணி 23 பேர்ச் பரப்பளவானதுடன் அக் காணியில் பழைய கட்டிடமொன்று காணப்பட்டது. | தெளிவான ஒலிபரப்பு டிஜிற்றல் அலைவரிசைகளிற்கு மிகவும் பொருத்தமான இடமாக இது இனங்காணப்பட்ட பின்னர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொண்ட பின்னர் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தாபன விதிக் கோவையின் ஐஐ ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சில வகுப்பு அல்லது சேவைக்குரிய ஏதாவது பதவி காணப்பட்டால் அனைத்து பதவிகளிற்காகவும் சம்பள அளவுத்திட்டம், தேவையான தகைமைகள், வயது எல்லை மற்றும் குறித்துரைத்தவாறான ஏனைய விபரங்கள் போன்ற தகவல்களை உள்ளடக்கி உரிய நிறுவனத்தால் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2.2 டிதாடக்கம் 2.5 வரையான உப பிரிவுகளின் பிரகரம் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் | 2019.06.07 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் காலந்துரையாடல்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்து அங்கீகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2019 ஆகஸ்ட் 05 வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பதவியணியினர் அங்கீகாரத்திற்கான 2018 செப்தெம்பர் 19 ஆம் திகதிய டிஎம்எஸ்/1591/5/3 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் ஆட்சேர்ப்புக்களை மாத்திரம் மேற்கொள்வதற்கு பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றில்லாமல் நீண்டகாலமாக கூட்டுத்தாபனத்தால் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அத்தியாவசிய பதவிகளிற்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீககரிக்கப்பட்டு பெறப்பட்ட பின்னர் மாத்திரமே பதவியுயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |